# இடங்கணசாலை நகராட்சி

## தீர்மான நகல்

## சிறப்புக்கூட்டம்

இடங்கணசாலை நகராட்சியில் சிறப்புக்கூட்டம் 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 01 ஆம் தேதி திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அறையில் நடைபெற்ற சிறப்புக்கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை** **பி.ஜி.கமலக்கண்ணன்,**
**நகர்மன்ற தலைவர்,**
**இடங்கணசாலை நகராட்சி.**

**பொருள் எண்.01**

அரசாணை (நிலை) எண்.119 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.26.06.2025 மற்றும் அரசாணை (நிலை) எண்.120 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.26.06.2025-ன்படியும், நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.13933/2022/ஏம்ஏ2 நாள்.30.06.2025 கடிதத்தின்படியும் மாற்றுத்திறனாளி ஒருவரை மன்ற உறுப்பினராக நியமிக்க 01.07.2025 முதல் 31.07.2025 வரை மாற்றுதிறனாளிகளிடமிருந்து மனுக்கள் பெற தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் ஏழு நபர்கள் விண்ணப்பம் வழங்கியுள்ளார்கள் அரசாணையின்படி மேற்கண்ட விண்ணப்பத்தை பரிசிலினை செய்ய மாவட்ட ஆட்சித்தலைவர் சேலம் அவர்களின் தலைமையில் உள்ள மாவட்ட அளவிலான குழுவிற்கு பரிந்துரை செய்யப்பட்டது. சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் உள்ள மாவட்ட அளவிலான குழுவில் இவ்வேட்புமனு கூர்ந்தாய்வு செய்யப்பட்டு திரு.பெ.வருதராஜ் என்பவரை மன்ற உறுப்பினராக நியமிக்க பரிந்துரைக்கபட்டது. அதன் அடிப்படையில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் பரிந்துரைக்கப்பட்ட நியமன உறுப்பினர் திரு.பெ.வருதராஜ் என்பவரை மன்ற உறுப்பினராக நியமித்தது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

திரு.பெ.வருதராஜ் அவர்களை மன்ற உறுப்பினராக நியமித்ததை தொடர்ந்து 27.11.2025 அன்று பதவி பிரமானம் நகராட்சி ஆணையர் மூலம் செய்து வைக்கப்பட்டது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்

**ந.க.எண்.1095/2025/எப்1**

**தீர்மான எண்.732, நாள். 31/12/2025.**

அனுமதிக்கப்பட்டது

(ஒப்பம்)பி.ஜி.கமலக்கண்ணன்,

நகர்மன்ற தலைவர்,

இடங்கணசாலை நகராட்சி,

சேலம் மாவட்டம்.

//உண்மை நகல்//

ஆணையாளர்,

இடங்கணசாலை நகராட்சி,

சேலம் மாவட்டம்.